தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 18-2-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலைக்கழக மாணவருக்கு நம்மாழ்வார் விருது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், காய்கறி பயிர்கள் துறையில் முனைவர் ஆராய்ச்சி மேற்கொண்டு வரும் செல்வன். த. பாலசங்கர் என்ற மாணவருக்கு சென்னையில் பிப்ரவரி 14-ல் தமிழன் தொலைக்காட்சி மூலம் நடைபெற்ற தமிழன் மாணவர் விருதுகள் வழங்கும் விழாவில் “**நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை மாணவர் விருது -2015**” வழங்கப்பட்டது.

முன்னதாக நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை, மக்கள் எழுத்தாளர், மக்கள் பேச்சாளர், மக்கள் போராளி, மக்கள் சமூக சேவகர், மக்கள் பொறியாளர், விளையாட்டு வீரர் மற்றும் தமிழ் மண் கலை விருது என பல்வேறுபட்ட பிரிவில் மொத்தம் 4023 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதிலிருந்து 160 மாணவர்கள் நேர்முக தேர்விற்கு அழைக்கப்பட்டனர். செல்வன். த. பாலசங்கர் (97870 85859) வேளாண்மை பிரிவில் சிறந்த முதுகலை ஆராய்ச்சியினை பேராசிரியர் நடராஜன் அவர்களின் தலைமையில் மேற்கொண்டார். வெண்டை பயிரில் இயற்கை உரங்களின் மூலம் பயிரின் வளர்ச்சி, தரம், மகசூல் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியுடையது என கண்டறிந்ததிற்கும், இதனடிப்படையில் நான்கு ஆராய்ச்சி கட்டுரைகள், பல்வேறுபட்ட விவசாய மாத இதழ்களில் தோட்டக்கலை சார்ந்த இயற்கை வழி பயிர் சாகுபடி மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றிய 29 கட்டுரைகளை எழுதியதற்காகவும் மற்றும் நேர்முக தேர்வில் சிறந்து விளங்கியதற்காகவும் செல்வன். த. பாலசங்கர் அவர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

விருது பெற்ற மாணவரை பல்கலைக்கழக துணைவேந்தர், கல்லூரி முதல்வர் மற்றும் காய்கறி பயிர்கள் துறைத்தலைவர் ஆகியோர் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்